சுருக்கம்

தேசிய நெடுஞ்சாலை – நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறை நகரில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு நிலம் கையகம் செய்ய ரூ.2,06,68,365/–ற்கு நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை(எச்வி2) துறை

அரசாணை (நிலை) எண்.84

நாள்: 13–07–2011
ஆனி 28, திருவள்ளுவர் ஆண்டு 2042
படிக்க:-

1) தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) கிராமச் சாலைகள்) கடித எண்.969/10/உ பொ/09, நாள்: 05.01.2011
2) மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை, கடிதம் எண்.RW/NH-28014/83/2010-TN /P7, நாள்: 10.02.2011
3) தலைமைப் பொறியாளர்(தேநெ) கடித எண்.4657/தி2/தேநெ/08, நாள்: 31.03.2011

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) கிராமச் சாலைகள்) அவர்கள், மயிலாடுதுறை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், போக்குவரத்து தடையின்றி நடக்கவும், மயிலாடுதுறை நகருக்கு புறவழிச்சாலை அமைக்க வேண்டுமென்றும், அதற்கான நில எடுப்பிற்காக ரூ.2,06,68,365/– செலவாகும் எனவும் தெரிவித்திருந்தார்.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மயிலாடுதுறை நகருக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணிக்காக 2010–11 ஆம் ஆண்டிற்கான புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் மத்திய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அவர்கள், மயிலாடுதுறை நகரில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்காக மைய அரசால், புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் ரூ.14.16 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

4. மேலும், இப்புறவழிச்சாலை அமைக்கும் பணியானது, தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் செயல்படுத்தப்படும் எனவும், நிலம் கையகப்படுத்தப்படும் பணி மட்டும் நபார்டு (ம) கிராமச் சாலைகள் அலகின் மூலம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து இதற்கான அரசின் ஆணையைக் கோரியுள்ளார்.

5. தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து மைய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிலம் கையகம் தொடர்பான பணிகளுக்கான செலவினத்தை மாநில அரசே ஏற்க வேண்டும் என்பதால் மத்திய சாலை நிதித் திட்டம் 2010–11 ஆம் ஆண்டு திட்டத்தில் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட மயிலாடுதுறை நகருக்கு 15.90 கி.மீ நீள புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு கையகப்படுத்த வேண்டிய நிலத்தின் பரப்பு தோரயமாக 50.97.16 ஹெக்டேருக்கு அதன் தோராய மதிப்பான ரூ.2,06,68,365/–க்கு(ரூபாய் இரண்டு கோடியே ஆறு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து முந்நூற்று அறுபத்தி ஐந்து மட்டும்) அரசு நிதி ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடுகிறது. மேலும், இப்புறவழிச்சாலைக்கான நில எடுப்பு பணிகளை நபார்டு (ம) கிராமச் சாலைகள் அலகிலும் இப்புறவழிச்சாலை அமைக்கும் பணியினை தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்நேர்வில் நன்செய் நிலங்கள் இருப்பின் அது குறித்து அரசின் ஒப்புதலை தனியே பெறும்படி தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) கிராமச் சாலைகள்) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி – 5 ல் ஒப்பதலளிக்கப்பட்ட தொகை கோரிக்கை எண் 21.07ன் கீழ் துவக்கப் பெற்ற பின்வரும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

" 5054 – சாலைகள் , பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04 – மாவட்டச் சாலைகளும் ஏனைய சாலைகளும் – 337 சாலைப் பணிகள் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KA புறவழிச்சாலைப் பணிகள் – 64 நிலங்கள்" (கு.தொ.கு.5054–04–337–KA-6405)

7. மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பிற்கு தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) ஊரகச் சாலைகள்) மதிப்பீடு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். சம்பந்தப்பட்ட கணக்கு அலுவலர் / கருவூல கணக்கு அலுவலர் இப்புதிய கணக்கு தலைப்பினை தங்களாது கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் புதுப்பணிகள் (New service) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வகையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (contingency fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி ( வரவு–செலவு /பொது –1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இருபடிகளை இணைத்து நிதி (வரவு–செலவு /பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) கிராமச் சாலைகள்), நெடுஞ்சாலைத் துறை சென்னை –32 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

9. மேலும், இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு 2011–12 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (supplementary estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி ( வரவு–செலவு பொது –1) துறைக்கு அனுப்புமாறு

-687

தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) கிராமச் சாலைகள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–32 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித்துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.35663/பொப1 /11, நாள்: 11– 07 –2011ன்படி கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.235, (இருநூற்று முப்பத்தி ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கி. ராமசந்திரன்
அரசு செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (நபார்டு (ம) கிராமச் சாலைகள்), சென்னை – 32
தலைமைப் பொறியாளர்(தேநெ), சென்னை – 5
கருவூல அலுவலர், நாகப்பட்டினம்
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 5/35
மாநிலக் கணக்காயர், சென்னை – 18

நகல்
நிதி ( வ.செ.பொ.I/ வ.செ.பொ.II/ பொதுப்பணி I)துறை, சென்னை 9
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
செயலாளர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறையின் தனிச் செயலர்,
சென்னை – 9
நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறையின் பிரிவுகள் (எச்என், எச்பி, எச்க்யூ, எச்எஸ்,
எச்டபிள்யூ) சென்னை – 9
இகோ/ உந

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மா. தங்கதேவி
பிரிவு அலுவலர்
13/7/11